Toronto District School Board

ஆகஸ்ட் 21, 2020

அன்பான பெற்றோரே/பாதுகாவலரே மற்றும் குடும்பத்தினரே,

நன்றி என்று பணிவாகக் கூறி நாங்கள் ஆரம்பிக்க விரும்புகின்றோம். பணிபுரிவோரும் மாணவர்களும் பாதுகாப்பாகப் பாடசாலைக்கும் பணிக்கும் திரும்புவதற்குத் தேவையான திட்டமிடல்கள் மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகாரங்கள் ஆகிய அனைத்தின் ஊடாகவும் நாங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கும்போது தொடர்ந்து நீங்கள் காட்டும் பொறுமைக்கு உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி. இது ஒரு எளிதான அல்லது நேரடியான செயல்முறையாக இருக்கவில்லை. TDSB பாடசாலைகளை நாங்கள் திறந்து மாணவர்களை மீண்டும் வரவேற்கும்போது எதை எதிர்பார்க்கலாம் என மேலும் அறிவதற்கு நீங்கள் ஆவலாக இருப்பீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது தொடரும் உங்களுடைய புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் நாங்கள் மனதாரப் பாராட்டுகின்றோம். பாதுகாப்பாகப் பாடசாலைக்குத் திரும்புதலை வினைத்திறனுடையதாகத் திட்டமிடுவதற்காக நாங்கள் எங்களால் இயன்ற அனைத்தையும் செய்துகொண்டிருக்கின்றோம். அத்துடன் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத்தினரைப் பாதுகாப்பாகவும் நலமுடனும் வைத்திருப்பதற்காக நாங்கள் மிகுந்த கவனத்துடன் சாத்தியமான யாவற்றையும் செய்துகொண்டிருக்கின்றோம்.

பாடசாலைகளில் மாணவர் மற்றும் பணியாளர்களுடைய பாதுகாப்பை மேம்படுத்த உதவுவதற்கென ஆரம்பநிலை வகுப்பிலுள்ள மாணவர்களின் அளவுகளைக் குறைக்கும்பொருட்டு மேலதிகமாக 366 ஆசிரியர்களைப் பணிக்கமர்த்துவதற்காக நிதியுதவி வழங்குவதில் $30 மில்லியனுக்கும் அதிகமான அங்கீகரிப்பு உள்ளடங்கலாக, பல முக்கிய முடிவுகளை நேற்றையதினம் அறங்காவலர்கள் எடுத்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். எங்களுடைய இரண்டாம்நிலை மற்றும் ஆரம்பநிலைக் கற்கை மாதிரிகளை எங்களுடைய பணியாளர்கள் இப்போது முடிவுசெய்துவிட்டனர், அத்துடன் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்குத் தேவையான முக்கியமான திட்டமிடலுடனும் தயார்படுத்தல்களுடனும் நாங்கள் முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம்.

**தாமதமாகத் தொடங்குதல்: செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 15**

பாடசாலைக்கு மீண்டும் திரும்புதலுக்குத் தேவைப்படும் நேரத்தைக் கருத்தில்கொள்ளும்போது. பாடசாலை தொடங்கும் முதல் நாளை (ஆரம்பநிலை, இரண்டாம்நிலை மற்றும் மெய்நிகர் பாடசாலை) **செவ்வாய்க்கிழமை, செப்டெம்பர் 15** ஆம் திகதிக்கு TDSB மாற்றவேண்டியுள்ளது. அனைத்து வகுப்புகளினதும் நுழைவு மூன்று நாட்களுக்கு ஊடாக நிகழும் வகையில் அப்போது மாற்றப்படும். இந்த மேலதிக நேரம் பாடசாலைகளை ஒரு பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான

முறையில் திறப்பதற்கு உதவும். பாடசாலை ஆரம்ப நாளுக்கு முன்னதாக மேலதிக தகவல்களும் குறிப்பிட்ட விபரங்களும் உங்கள் பிள்ளையின் பாடசாலையிலிருந்து நேரடியாக பெற்றோர்/குடும்பத்தினருடன் பகிர்ந்துகொள்ளப்படும்.

<u>**முகக் கவசம்/முக மறைப்பு வழிகாட்டிகள்**</u>

பாடசாலைகளில் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்காக, மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் <u>அனைவரும்</u> TDSB கட்டிடங்கள் மற்றும் பாடசாலைப் பேரூந்துகளில் முகக் கவசங்கள்/முக மறைப்புகள் அணியுமாறு வேண்டப்படுவர். இரண்டு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் – மருத்துவக் காரணங்களுக்காக விதிவிலக்களிக்கப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் – தமது சொந்த முகக் கவசங்கள்/முக மறைப்புகளை அணியவேண்டும் என்ற ரொறன்ரோ நகரின் ஒட்டுமொத்தத் தேவைக்கிணங்க இந்தத் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. தேவைப்பட்டால் மாணவர்களுக்கு முகக் கவசங்கள் பாடசாலைகளில் கிடைக்கும் என்றாலும், தமது சொந்த முகக்கவங்கள்/முக மறைப்புகளை அவர்கள் அணிவார்கள் என்பதே எதிர்பார்ப்பாகும். முக்கியமாக இளவயது மாணவர்களுக்கு, வெளிப்புறத்தில் இடைவேளைகள் இருக்கும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம், எனவே மாணவர்கள் பல மணித்தியாலங்களுக்குத் தொடர்ந்து ஒரேயடியாக முகக்கவசங்களை அணிந்துகொண்டிருக்கமாட்டார்கள். முகக் கவசம்/முகமறைப்புகள் பற்றிய மேலும் விபரங்கள் விரைவில் வெளிவரும்.

<u>**கற்கை மாதிரிகள்**</u>

**ஆரம்பநிலை (பாலர் வகுப்பு முதல் தரம் 8 வரை)**

மாணவர்கள் (விசேட கல்வி மற்றும் முற்றுமுழுதாக பிரெஞ்சு & நீடிக்கப்பட்ட பிரெஞ்சு திட்டங்கள் உள்ளடங்கலாக) வாரமொன்றுக்கு 5 நாட்கள், இடைவேளை மற்றும் மதிய உணவு இடைவேளை உள்ளடங்கலாக, முழு நாளும், ஒரு பிரிவு/குழு அமைப்பில், பாடசாலைக்குச் சமூகமளிப்பார்கள். அதிகபட்சம் உடல்ரீதியாக விலகி இருப்பதற்கு உதவுவதற்காக சிறிய வகுப்பு அளவுகள் உள்ளடங்கலாக மேம்படுத்தப்பட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகள் நடைமுறையில் இருக்கும். COVID-19 தொற்று ஏற்படும் ஆபத்து அதிகமாக உள்ளதென ரொறன்ரோ பொதுச் சுகாதாரத் தரவுகள் இனம்காணும் ரொறன்ரோ சமூகங்களில் அமைந்துள்ள ஆரம்பநிலைப் பாடசாலைகள் ஏனைய ஆரம்பநிலைப் பாடசாலைகளைவிட வகுப்புக்களில் குறைந்தளவு மாணவர்களைக் கொண்டிருக்கும். ஆரம்பநிலை வகுப்பு அளவுகள் பற்றிய முக்கிய <u>தகவல்கள் உள்ளடங்கலாக,</u> மேலதிக தகவல்களுக்கு எங்களுடைய வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

**இரண்டாம்நிலை (தரம் 9 முதல் 12 வரை)**
மாணவர்கள் (விசேட கல்வி மற்றும் முற்றுமுழுதாக பிரெஞ்சு & நீடிக்கப்பட்ட பிரெஞ்சு திட்டங்கள் உள்ளடங்கலாக) அதிகபட்சம் உடல்ரீதியாக விலகி இருப்பதற்கு உதவுவதற்காக சிறிய வகுப்பு அளவுகள் உள்ளடங்கலாக அமுலில் இருக்கும் மேம்படுத்தப்பட்ட சுகாதார நடைமுறைகளுடன், ஒன்று விட்டு ஒரு நாளைக்கு வகுப்புக் கற்கை மற்றும் ஏக காலத்தில் (நேரடியாக, இணையக் கற்கை) அத்துடன் ஏக காலத்தில் இல்லாமல் (சுயமாகச் செயற்படல்) தினசரி கற்றல் அவர்களுக்கு இருக்கும். மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து **இந்த வலைதளத்தைப் பார்வையிடவும்.**

**மெய்நிகர் பாடசாலை (பாலர்வகுப்பு முதல் தரம் 12 வரை)**
தங்களுடைய பிள்ளை வீட்டிலிருந்து கற்பதை விரும்பும் பெற்றோர் தொலைதூரக் கற்கை முறையைத் தேர்ந்தெடுக்கலாம். மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை வலைத்தளங்களைப் பார்வையிடவும்.

**பாடசாலையில் நேரில் அல்லது மெய்நிகர் கற்கைக்கான பதிவு**
எந்த மாணவர்கள் செப்டெம்பர் மாதத்தில் பாடசாலைக்குச் சமூகமளிக்கத் திட்டமிட்டார்கள் எனவும் எந்த மாணவர்கள் முழுமையான தொலைதூர (வீட்டிலிருந்து) கற்கை முறையில் பங்குபற்றத் திட்டமிட்டனர் எனவும் அறிவதற்கு இந்த மாத முற்பகுதியில் முன்பதிவு செயல் முறை ஒன்றை நாங்கள் ஆரம்பித்திருந்தோம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த நேரம் முதல், கற்கை மாதிரிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதுடன் இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு பெற்றோருக்கு உதவும்பொருட்டு மேலதிக தகவல்கள் கிடைக்கின்றன. ஆகவே, அடுத்தபுதன்கிழமை, பெற்றோர்/பாதுகாவலரை ஒரு இறுதி முடிவு எடுக்குமாறும் அவர்களுடைய பிள்ளைகள் பாடசாலைக்குச் சமூகமளிக்குமளிப்பதற்குப் பதிவு செய்யுமாறு அல்லது *மெய்நிகர் பாடசாலை* ஊடாக தொலைதூரக் கற்கையைத் தெரிவுசெய்யுமாறு மின்னஞ்சல் மூலம் TDSB கேட்டுக்கொள்ளும். ஒவ்வொரு மாணவருக்கும் இணையப் பதிவுப் படிவத்திற்கான தனிப்பட்ட இணைப்பொன்றை அந்த மின்னஞ்சல் உள்ளடக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருக்கும் பெற்றோர்/பாதுகாவலருக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு மின்னஞ்சல் கிடைக்கும், அத்துடன் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனித்தனியான பதிவைப் பூர்த்திசெய்யுமாறு வேண்டப்படுவார்கள். இணையப் பதிவு இருபது வித்தியாசமான மொழிகளில் கிடைக்கப்பெறும்.

அனைத்துப் பெற்றோர்/பாதுகாவலரும் இந்த இணையப் பதிவைப் பூர்த்திசெய்வது மிகவும் முக்கியமாகும், கடந்த வாரம் முன்பதிவுத் தொலைபேசி அழைப்பிற்கு ஏற்கனவே பதிலளித்திருந்தவர்களும் கூட இதைச் செய்யவேண்டும். கோப்பில் மின்னஞ்சல் முகவரி ஒன்று இல்லாத அல்லது இணையப் பதிவைப் பூர்த்தி செய்யாத பெற்றோர்/பாதுகாவலருக்கு மாத்திரம்

தமது தெரிவைச் செய்யுமாறு கேட்கும் பதிவுக்கான தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைக்கப்பெறும். மேலதிக தகவல்களுக்கும் [பதிவுக்கான வேறுபட்ட தெரிவுகள்] பற்றி அறிவதற்கும் TDSB வலைத்தளத்தைப் பார்வையிடுமாறு அனைத்துப் பெற்றோரையும்/பாதுகாவலரையும் நாங்கள் ஊக்குவிக்கின்றோம்.

**புதன்கிழமை, ஆகஸ்ட் 26:** அனைத்துப் பெற்றோர்/பாதுகாவலருக்கும் மின்னஞ்சல் அனுப்பப்படுவதுடன் பதிவுசெய்தல் ஆரம்பமாகும்
**சனிக்கிழமை, ஆகஸ்ட் 29**: பதிவுசெய்தல் முடிவடையும்

**அடுத்த படிமுறைகள்**
எதிர்வரும் நாட்களில், நாங்கள் குடும்பத்தினருக்குத் தொடர்ந்து அறிவிப்பதுடன் அண்மித்த தகவல்களையும் வழங்குவோம். பணியாளர்களையும் மாணவர்களையும் வரவேற்பதற்கு நாங்கள் பாடசாலைகளைத் தயார்படுத்திக்கொண்டிருக்கின்றோம். முதலாவது படிமுறையாக, செயல்திட்டம் மற்றும் செயற்பாட்டு வழிக்காட்டல்கள் தற்போது முடிவுசெய்யப்பட்டுக்கொண்டிருப்பதுடன் அவை அடுத்தவாரம் அதிபர்கள்/உப அதிபர்கள் மற்றும் பாடசாலை பணியாளர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும். பணியாளர்களும் மாணவர்களும் பாடசாலைக்குப் பாதுகாப்பாகத் திரும்பும்பொருட்டு, பாடசாலை வசதிகளில் பல பரிசீலிப்புகளும் மாற்றங்களும் செய்யவேண்டியுள்ளன, அத்துடன் இந்தத் தேவைகள் பற்றி அறிந்துகொள்வதற்கும் மாணவர்கள் பாடசாலைக்குத் திரும்புவதற்கு முன்னர் அவற்றை அமுல்படுத்தத் தொடங்குவதற்கும் பாடசாலைப் பணியாளர்களுக்கு நேரம் தேவைப்படுகின்றது. பாடசாலைகளுக்கான எங்களுடைய [சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்கள்] பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு எங்களுடைய வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

இந்த முக்கிமான பணி தொடரும் இவ்வேளையில், உங்களைத் தொடர்ந்து பொறுமை பேணுமாறு வேண்டுகின்றோம். செப்டெம்பர் மாதத்திற்காக திட்டமிடுவதற்கு இடமளிக்கும் தகவல்கள் மற்றும் விவரங்களுக்காக ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைப் பணியாளர்களும் கூட ஆவலுடன் காத்திருக்கின்றனர் என்பதைத் தயவுசெய்து நினைவில் வைத்திருங்கள். குறித்த பாடசாலை மற்றும் வகுப்புக்கான திட்டங்களைத் தயார் செய்யவும் முடிவு செய்யவும் சற்று நேரம் எடுக்கும். இயன்றளவு விரைவில் பாடசாலை அதிபர்கள் குடும்பத்தினருடன் குறித்த பாடசாலை தொடர்பான தகவல்களை நேரடியாகப் பகிர்ந்து கொள்ளத் தொடங்குவார்கள் என்பதைத் தயவுசெய்து அறிந்துகொள்ளுங்கள்.உங்களிடம் பல கேள்விகளும் கரிசனைகளும் இருக்குமென்பதை நாங்கள் அறிவோம். மேலும், தேவையான தகவல்களை வழங்குவதற்கும் அவை பற்றி உங்களுக்குத் தொடர்ந்து அறியத்தரவும் பணியாளர்கள் தங்களால் இயன்றவரை தொடர்ந்து திறம்படச் செயலாற்றுவார்கள்.

நாங்கள் இதில் ஒன்றிணைந்து இருப்பதுடன் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் ஒரு பொது இலக்கை நாங்கள் அனைவரும் பகிர்ந்துகொள்கின்றோம். பாடசாலைக்கு மீண்டும் திரும்புதல் ஒவ்வொருவருக்கும் இயன்றவரை இலகுவாக இருக்கவேண்டுமென நாங்கள் விரும்புவதுடன் இது நிறைவேறுவதற்கு நாங்கள் தொடர்ந்து ஒன்றிணைந்து பணிபுரியவேண்டும்.

உண்மையுள்ள,





Carlene Jackson
Director of Education (கல்வி அதிகாரி)

Alexander Brown
Chair (தலைவர்)